Date of Publication : 1st of Every month
Date of Posting : 5th & 6th of Every month

Regd. No. TN / CC (S) DN / 119 / 12-14
Licensed to Post without Prepayment
WPP No. TN/PMG(CCR)/WPP-608/12-14

வேணு: 19 ஜூலை 2014 கானம் : 12



Published by S.Srinivasan on behalf of Guruji Sri Muralidhara Swamigal Mission, New No.2, Old No.24, Netaji Nagar, Jafferkhanpet, Chennai - 600083 and Printed by Mr.R.Kumaravel of Raj Thilak Printers (P) Ltd, 1/545A, Sivakasi Co-Op Society Industrial Estate, Sivakasi. Editor: S.Sridhar

NO FAME NO SELF INTEREST NO NAME ONLY GOD

Rs.10/-

# மதுரமுரளி

MADHURA MURALI

ஆண்டு சந்தா ரூ120/-

மஹாரண்யம் ஸ்ரீஸ்ரீ முரளீதர ஸ்வாமிஜி அவர்கள் அருளாசியுடன்
வெளிவரும் தெய்வீக மாதப்பத்திரிக்கை



வேணு : 19 | ஜூலை 2014 | கானம் : 12

by India Post

www.indiapost.gov.in





ஜூன் 22, அண்ணா நகர் நாமத்வார் 5ஆம் ஆண்டு துவக்க விழா







ஜூன் 20, 21, மலேசிய நாமத்வாரில் "மதுர உத்ஸவம்" - பாக்யாஜி





ஜூன் 7 -8, நியூசிலாந்து வெலிங்டன் ஸ்ரீகுறிஞ்சி முருகன் கோவிலில் நவயோகி உபாக்யானம் - பூர்ணிமாஜி



ஜூன் 2 - 11, சிவகாசியில் ஸ்ரீமத் ராமாயணம் - முரளிஜி





ஜூன் 2, ஆரணி அருகே கங்காபுரம் ஸ்ரீஅனந்தசயன பெருமாள் கோவில் கும்பாபிஷேகம்



ஜூன் 17, மலேசிய கேரி ஹைலேண்ட் பள்ளியில் மாணவர்களுக்கான மஹாமந்திர கூட்டு பிரார்த்தனை - பாக்யாஜி

# ஜூன் 3-12- மதுரபுரி ஆஸ்ரமம் - வசந்தோத்ஸவம்











ஸ்ரீ ஹரி :

மஹாரண்யம் ஸ்ரீ ஸ்ரீ முரளீதர ஸ்வாமிஜி
அவர்கள் அருளாசியுடன்

# மதுரமுரளி

தெய்வீக மாதப் பத்திரிகை

வேணு: 19 ஜூலை 2014 கானம்: 12

**ஹரே ராம ஹரே ராம ராம ராம ஹரே ஹரே**
**ஹரே க்ருஷ்ண ஹரே க்ருஷ்ண க்ருஷ்ண க்ருஷ்ண ஹரே ஹரே**

**இந்த இதழில் ...**

| | | | |
|---|---|---|---|
| மதுரமான மஹனீயர்-220 | 03 | லீலா விநோதன் | 15 |
| காரணமில்லாதது குரு அருள் | 05 | வீடு தேடி வருவான் | 21 |
| ஸ்ரீஸ்வாமிஜியின் பதில்கள் | 06 | பாலகர்களுக்கு ஒரு கதை | 27 |
| பாகவத பழம்- ஸ்க2 /14 | 08 | பிருந்தாவனமும் நந்தகுமாரனும் | 30 |
| ஆறறிவே அந்தம் அல்ல | 12 | மாலே மணிவண்ணா | 32 |
| ஆசையே பிறவிக்கு காரணம் | 14 | அப்பாலுக்கு அப்பால் | 34 |

**God is a wonder. His name is a greater wonder. As a worm bores through the wood until it makes the inside hollow, the RAM mantra gradually destroys all your desires and purifies you through and through.**

**By chanting it, a new strength, a new joy and a new light will reveal themselves in you. Then you will realize you are an immortal and radiant Spirit ever identical with God.**

**- Swami Papa Ramdas**

# ஸ்ரீஸ்வாமிஜியின் கீர்த்தனம்

"விட்டலா யே ரே மெட்டு"

கோவிந்தனுக்காட்பட்ட குடும்பமம்மா எங்கள் குடும்பம்
(கோ)

இல்லறத்தில் இருந்திடுவோம், நல்லறங்கள் செய்திடுவோம்
எல்லாம் அவன் இஷ்டம் என்றெண்ணி, அல்லல்படமாட்டோம்
(கோ)

பாகவத கதை கேட்டிடுவோம் ராக தாளத்துடன் பாடிடுவோம்
சோக மோக படமாட்டோம் நாகரிகமாய் பழகிடுவோம்
(கோ)

கூடி கூடி பேசிடுவோம், ஆடி பாடி களித்திடுவோம் - அவன்
அடியார்களை தேடி தேடி ஓடி ஓடி பணிந்திடுவோம்
(கோ)

பிள்ளை குட்டியுடன் வாழ்ந்திடுவோம், நல்லறங்கள் சொல்லி
வளர்த்திடுவோம்
கள்ளமில்லா பாகவத தர்மத்திலே பழக்கிடுவோம் (கோ)

பேராசை படமாட்டோம், பாசத்திலே விழமாட்டோம்
நேசத்துடன் தாமரை இலை தண்ணீரைப் போல்
வாழ்ந்திடுவோம் (கோ)

கவலைப்படமாட்டோம், காலனுக்கு அஞ்சமாட்டோம்
புண்ணியம் பாவம் காலம் என்று பரிதவிக்கவும்
மாட்டோம் (கோ)

அமர்ந்தாலும் எழுந்தாலும், நின்றாலும் நடந்தாலும்
பசித்தாலும் புசித்தாலும் அவன் பெயரையே
சொல்லிடுவோம் (கோ)

மனதினால் நிறைந்துள்ளோம், குணத்தால் உயர்ந்துள்ளோம்
அமைதியுடன் என்றும் வள்ளல் போல் வாழ்ந்திடுவோம்
(கோ)

சோம்பி திரியவும் மாட்டோம், வம்பு பேசவும் மாட்டோம்
நம்பி அவன் சரணத்தை நாமம் சொல்லி வாழ்த்திடுவோம்
(கோ)

# மதுரமான மஹநீயர் – 220

– விஷ்ணுராத பாகவதர்

அடிக்கடி ஸ்ரீஸ்வாமிஜி அவர்கள் கோவிந்தபுரம் வருவார். சில நாட்கள், சைதன்ய குடீரத்தில் தங்கி இருப்பார். அதுபோல் ஜூன் மாதம் 14ஆம் தேதி, கோவிந்தபுரம் சைதன்யகுடீரம் வந்திருந்தார். இந்த முறை, சைதன்யகுடீரத்தில் உள்ளே நுழையும்பொழுதே, "நல்ல சான்னித்யத்துடன் இருக்கின்றது" என்று சொல்லிக்கொண்டே நுழைந்தார்.

சைதன்ய குடீரத்தில் இந்த முறை மஹாமந்திரம் சொல்லும்பொழுதெல்லாம் "காலக்ஷேபோ ந கர்தவ்ய:" என்ற ஸ்லோகத்தை அடிக்கடி சொல்லிக்கொண்டே மஹாமந்திர கீர்த்தனம் சொன்னார். என்னையும் இந்த ஸ்லோகத்தை அடிக்கடி சொல்ல சொன்னார். "நமக்கு மரணம் வந்து விடும். யமன் நம் முன்பாக வருவான். நான் நாமகீர்த்தனம் செய்யாமல் நேரத்தை வீணாக்கி விட்டேன். "**GRACE TIME**" கொடு என்றால், கொடுக்க மாட்டான். மரணம் எப்பொழுது வரும் என்று தெரியாது. அப்படி இருந்தாலும், ஆரோக்யத்துடன் இருப்போமா என்று தெரியாது. இன்று இருக்கின்றோம். நாமா சொல்ல முடிகின்றது. நன்றாக சொல்லி விடுவோம்" என்றார்.

"கடினமான கல் உடைக்கும் வேலையை சிலர் செய்கின்றார்கள்; சிலர் மூட்டை தூக்குகின்றார்கள்; சிலர் **ROAD** போடுகின்றார்கள்; சிலர் அசுத்தங்களை சுத்தம் செய்கின்றார்கள்; முக்கியமான பொறுப்பில் உள்ளவர்கள் இரவு,பகலாக கண்விழித்து வேலை செய்கின்றார்கள்; நமக்கு எல்லா வசதிகளையும் செய்து கொடுத்து, நாமா சொல்ல சொல்கின்றான் பகவான். நாம் அது கூட சொல்லவில்லை என்றால், பகவானுக்கு துரோகம் செய்தவர்கள் ஆகி விடுவோம்" என்றார்.

சில நாட்கள், நான் உடல் எடையை குறைக்க வேண்டும் என்று, சில பயிற்சிகள் செய்து குறைத்திருந்தேன். ஸ்ரீஸ்வாமிஜி என்னை பார்த்து, "ரொம்ப சாப்பிடாமல் இருந்தால், நாமா சொல்ல முடியாமல் போய் விடப்போகின்றது. அது இல்லை, நம்முடைய

வழி. புரந்தரதாசர் சொல்வது போல் நன்றாக சாப்பிட வேண்டும். எதற்காக என்றால் நல்ல (ENERGY) எனர்ஜியுடன் நாமா சொல்வதற்காக" என்றார்.

"மனிதபிறவியில்தான், ஒருவன் தான் செய்த பாவங்களை கர்மம், தானம், தவம், தீர்த்தங்களில் ஸ்நானம், க்ஷேத்ரங்களின் தர்சனம், ஜபம், தியானம், கீர்த்தனம், பாராயணம், பசுக்களுக்கு சேவை, ஆண்டவனுக்கும் அடியார்களுக்கும் தொண்டு, போன்றவைகளை செய்து, பல பிறவிகளில் செய்த பாவங்களை போக்கி கொள்ள முடியும். அப்படி மனித பிறவி கிடைத்தும், நிறைய பாவம் செய்கின்றார்களே தவிர, புண்ணியம் எதுவும் செய்வதில்லை. அதுதான் போகட்டும், நாமகீர்த்தனம் என்ற எளிய வழியில் பாவத்தை போக்கி கொள்ளலாம். அதைக்கூட செய்ய முன்வரமாட்டேன் என்கின்றார்கள்" என்றார். பூமியிலிருந்துதானே பயிர்கள் விளைகின்றன. பூமியிலிருந்துதானே நீர் கிடைக்கின்றது. இவைகளை உணவாக கொண்டுதான், உலகத்தில் உள்ள எல்லா மனிதர்களும், ஜீவராசிகளும் வாழ்கின்றார்கள். அதனால்தான் பூமிபிராட்டி, உலகத்தில் உள்ள அனைத்து ஜீவராசிகளுக்கும் தாய். பகவான் வாசுதேவன்தான் தந்தை" என்றார்.

ஸ்ரீஸ்வாமிஜி முன்பாக, ஒரு அபங்கம் பாடினேன். அதில் "முகே துஜே நாம ஸந்தாஞ்ச தர்சன" என்ற வரி வந்தது. உடனே என்னை கூப்பிட்டு, "வாக்கில் எப்பொழுதும் உனது நாமம், எப்பொழுதும் சாதுக்களுடைய தரிசனம் என்று இதற்கு பொருள். நாமஜபம் செய்யாமல், இந்த அபங்கத்தை நீட்டி முழக்கி பாடுவதால், ஒரு BEAT கிடைக்குமே தவிர, வேறு ஒரு பலனும் இல்லை" என்றார்.

சைதன்ய குடீரத்திற்கு வேண்டிய சில பொருள்களை வாங்க வேண்டி, அடிக்கடி கும்பகோணம், தஞ்சாவூர் சென்று வருவேன். "அப்பொழுதெல்லாம் நாமா சொல்லிக்கொண்டே செல்வாயா? மாதத்திற்கு சில நாட்கள் வீட்டிற்கு செல்கின்றாயே, வீட்டில் நாமா சொல்வாயா? நாமா உடலில் ஊற வேண்டும்" என்றார்.

நானும் ஸ்ரீஸ்வாமிஜி அவர்களும், போதேந்திராள் அதிஷ்டானத்திற்கு சென்றோம். "ஸ்ரீமத் பாகவதம், குருபக்தி, நாமநிஷ்டை மூன்றும் சேர்ந்த ஒரே ஸ்வரூபம் பாலகிருஷ்ணானந்த

ஸ்வாமிகள்" என்றார். அதிஷ்டானத்தை சுற்றி வரும் பொழுது ஒரு மேல் துண்டு கேட்பாரற்று, கீழே கிடந்தது. சுத்தமாகத்தான் இருந்தது. யாரோ நமஸ்காரம் செய்தவரிடம் இருந்து அவிழ்ந்து விழுந்திருந்தது. அவரும் அதை அறியாமல் போய் விட்டார். பலர் சுற்றி வந்தபொழுதும், அந்த துண்டை பார்த்தும், லக்ஷியம் செய்யவில்லை. அதை எடுத்து உரியவரிடம் கொடுக்கவுமில்லை. அதை தூர வீசவும் இல்லை.

அந்த மேல்துண்டை என்னிடம் காண்பித்து, "இதை பார்த்தால் உனக்கு என்ன எண்ணம் தோன்றுகின்றது?" என்றார். நான் ஒன்றும் பதில் சொல்ல வராமல் ’திரு’ ’திரு’ என்று விழித்தேன். "பிராணன் போய் விட்டால் என் சரீரமும், உன் சரீரமும், இப்படித்தான் கேட்பாரற்று கிடக்கும். சரீரத்திற்கு இவ்வளவுதான் மதிப்பு. இருக்கும் வரை நிறைய நாமா சொல்வோம்" என்றார்.

---


## காரணமில்லாதது குரு அருள்

–நல்ல ஹரி

நம்முடைய வாகனத்தை ஒருவர் வீட்டின் முன் சற்று நேரம் நிறுத்தினால், சண்டைக்கு வருகின்றார்கள். மழைக்கு ஒருவர் வீட்டில் சற்று ஒதுங்க கூட அனுமதிப்பது இல்லை. நாம் நன்றாக சாப்பிட்டுக் கொண்டிருக்கும்பொழுது, பசியுடன் இருப்பவர்களுக்கு, ஒரு பிடி சாதம் கொடுப்பதில்லை. பொருள், பதவி விஷயமாக தந்தை, மகன், அண்ணன், தம்பிக்குள்ளாகவே சண்டை வந்து விடுகின்றது.

ஒருவர் இரவு, பகல் கடினமாக உழைத்து, அடக்க முடியாத இந்திரியங்களை அடக்கி, மனதை ஒருமுகப்படுத்தி, இறை அனுபவத்தை அடைகின்றார். எவ்வளவோ முறை கீழே விழுந்து எழுந்து, சிரமப்பட்டு அடைகின்றார்கள். அப்படி தாங்கள் அடைந்த அனுபவத்தின் அருளை, தன்னை அண்டியவர்களுக்கு எந்த காரணமும் இல்லாமல், எந்த எதிர்பார்ப்பும் இல்லாமல் பொழிகின்றார்கள் என்றால், இது அல்லவோ காரணமில்லாத கருணை! அவர்தான் குருநாதர்!

இதற்கு நாம் என்னதான் செய்து விட முடியும்! பதில் செய்ய முடியாது என்பதை உணர்ந்து உணர்ந்து, நெகிழ்ந்து அழுவதை தவிர வேறு ஒன்றும் செய்ய முடியாது!



# பக்தர்களின் கேள்விகளுக்கு ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்களின் பதில்கள்

கேள்வி: பகவானுடைய நாமத்தை, மனது ஈடுபடாவிட்டால் கூட பரவாயில்லை; தொடர்ந்து ஜபம் செய்து வர சொல்கின்றீர்கள். அப்படி சொல்லி வருவது, தியானம் என்கின்றீர்கள். அது எப்படி தியானம் ஆகும்?

பதில்: ஒருவர், தன்னுடைய இஷ்ட தெய்வத்தை தியானம் செய்கின்றார். அவர் எப்படி தியானம் செய்வார்? அந்த மூர்த்தியின் பாதம் முதல் தலை வரையும், தலையிலிருந்து பாதம் வரையும், பார்த்து கொண்டே வருவார். பிறகு திருவடியிலோ, முகத்திலோ அவருக்கு ஈடுபாடு உடைய ஒரு அவயத்தில் விடாமல், ஒருமுகப்படுத்த முயல்வார். சிந்தனைகள் வெளியே ஓட முயலும்பொழுதெல்லாம், தடுத்து நிறுத்தி, அதை இழுத்து தன்னுடைய இஷ்ட மூர்த்தியிடம், நிறுத்துகின்றார்கள். பெரும்பாலும் தியானம் செய்யும்பொழுது, பக்தியுடன் செய்ய வேண்டும் என்பதை காட்டிலும், மனதை கவனத்துடன் ஒருமுகப்படுத்தவே தீவிரமாக முயற்சிப்பார்கள்.

இப்படி செய்வதைத்தானே தியானம் என்கின்றோம். அதுபோல் பக்தியுடன் சொல்கின்றாயோ, ஈடுபாட்டுடன் சொல்கின்றாயோ, அவைகள் எல்லாம் ஒருபுறம் இருக்கட்டும். முதலில் கவனமாக ஒரே நாமத்தை சொல்லி வர வேண்டும்.

கேள்வி: அப்படி ஒரே நாமத்தை சொல்லும்பொழுது, ஒரே மாதிரி ஒரே மெட்டில் சொல்ல வேண்டுமா? அல்லது எப்படி வேண்டுமானாலும் சொல்லலாமா?


பதில்: பல பாடல்களை பாடுவதை விட, ஒரே நாமாவை சொல்லி வருவது உயர்ந்தது. அந்த ஒரே நாமாவையும், ஒரே டியூனில் அல்லது மெட்டில் சொல்லி வந்தால், மனது சுலபத்தில் ஒருமுகம் ஆகும்.

கேள்வி: என்னைக் காட்டிலும், எவ்வளவோ நல்லவர்கள், படித்தவர்கள், விஷயம் தெரிந்தவர்கள், தீவிரமாக ஜபம் செய்பவர்கள் போன்றவர்கள் எல்லாம் இருக்கும்பொழுது, எதற்கும் லாயக்கு இல்லாத சாமான்யன் என்றால், எப்படி பகவானை அடைய முடியும் என்ற நினைப்பு அடிக்கடி வந்து என்னை சோர்வடைய செய்கின்றது.

பதில்: நாம் ஜபம், தியானம் செய்யும்பொழுது, அவர்களால் எல்லாம் முடியாதது, நம்மால் எப்படி முடியும் என்ற எண்ணமே வரக்கூடாது.

"அவர்களால் முடியுமா? முடியாதா? அது எனக்கு தேவையில்லாத விஷயம். நிச்சயம் என்னால் முடியும் என்று சந்தேகப்படாமலும், அதைர்யப்படாமலும் முயற்சிக்க வேண்டும்".

உண்மையில், நிறைய படிக்காதவர்கள் பலர், இறையனுபூதியில் உயர்ந்த நிலையை அடைந்துள்ளார்கள்.



# பாகவத பழம்

## ஸ்கந்தம் 2, அத்யாயம் 4

–ஸ்ரீ ஸ்வாமிஜி (14)



ஸ்ரீசுகர் பகவானைப் போற்றி செய்யும் ஸ்துதி - சென்ற இதழ் தொடர்ச்சி ..

"தஸ்மை ஸுபத்ர ச்ரவஸே நமோ நம:" - புண்ணியமான, எல்லோரையும் பாவனமாக்குகின்ற கீர்த்தியை உடையவனுக்கு நமஸ்காரம் என்று பலமுறை கூறுகிறார் ஸ்ரீசுகர்.

விவேகிகள் எந்த பகவானுடைய திருவடிகளை சேவிப்பதால், இவ்வுலகம் மற்றும் பரலோகம் இரண்டிலிருந்தும் பற்றுதலை விட்டுவிட்டு, எவ்வித சிரமமுமின்றி பிரம்மஞானத்தை அடைகிறார்களோ, அந்த மங்களகரமான கீர்த்தியையுடைய பகவானுக்கு மீண்டும் நமஸ்காரம்.

உலகத்தில் எந்த சாரமுமில்லை என்று உணர்ந்த விவேகிகள், பகவானின் திருவடிகளை மட்டுமே உபாஸிக்கின்றனர். அந்த திருவடி உபாஸனையால், அவர்கள், இவ்வுலகில் வீடு, மனைவி, சொத்து, சொந்தம் என்று எல்லாவற்றிலும் பற்றுதலை இழப்பது மட்டுமில்லாமல், பரலோகத்திலும் ஸ்வர்காதி போகங்களிடத்திலிருந்தும், மனதை விலக்கி விடுகிறார்கள். இதன் பயனாக அவர்கள் எந்த ஒரு சிரமமுமேயில்லாமல், இருப்பதிலேயே உயர்ந்ததான பிரம்ம ஞானத்தை அடைகிறார்கள். கதக்லமா: என்கிறார் ஸ்ரீசுகர். சிரமமில்லாதவர்களாக என்று பொருள்.

பாகவதம் கேட்பதும், ராம நாம ஜபம் செய்வதைக் காட்டிலும், எளிதாக எதையாவது செய்யமுடியுமா? அதையே இங்கு சுகர் கூறுகின்றார். இவற்றால் மட்டுமே, சிரமமின்றி ஜீவன்முக்தி நிலையை அடைகிறான் என்றும் கூறுகிறார் சுகர். தபஸ்விகளும், தானம் செய்பவர்களும், கீர்த்தியுடையவர்களும், யோகிகளும், மந்திரங்களை அறிந்தவர்களும், நல்லொழுக்கத்தில் இருப்பவர்களும் எவரிடத்தில் இவைகளை அர்ப்பணம் செய்யாமல்

க்ஷேமத்தை அடைவதில்லையோ, அந்த மங்களகரமான கீர்த்தியையுடைய அந்த பகவானுக்கு நமஸ்காரம் என்கிறார்.

ஒருவன் சாப்பிடாமல், தூங்காமல் தபஸ் செய்கின்றான். ஆனால், ஹரிநாமகீர்த்தனம் செய்யவில்லையென்றால், அவனது தவம் வீணேயாகும். இல்லை என்று வருபவர்களுக்கு எல்லாம் ஒருவன் தானம் செய்தபோதிலும், அவனிடம் ஹரிபக்தியில்லையென்றால் அவனது தானமும் வீணாம்.

பிராணாயாமம் செய்து, ஆஸனஸித்தி பெற்று ஒருவன் யோகியானாலும், அவனிடம் ஹரிபக்தியில்லை என்றால் எல்லாமே வீண்தானாம். பல மந்திரங்களைத் தெரிந்து வைத்திருந்தபோதிலும் ஹரி பக்தி செய்யவில்லையென்றால், ஒரு பிரயோஜனமும் இல்லையாம். மிகவும் நல்லவராகவும் நல் ஒழுக்கங்களுடனும் ஒருவர் இருந்தபோதிலும் அவரிடம் ஹரிபக்தி இல்லையென்றால், அவற்றாலெல்லாம் எவ்வித பிரயோஜனமும் இல்லையாம்.

தனது தவம் முழுவதையும் ராமருக்கு அர்ப்பணம் செய்த பின்னரே, ஷரபங்கர் உண்மையான தபஸ்ஸித்தியை அடைந்ததைப் பார்க்கின்றோம். அதேபோல், கொடைவள்ளலாக இருந்த கர்ணனும், போர்க்களத்தில் தனது தான பலன்களை முழுவதும் கிருஷ்ணனுக்கு அளித்த பின் உயர்ந்த கதியை அடைவதைப் பார்க்கின்றோம். மந்திரங்களை ஜபிப்பவர்களுக்கு சில ஸித்திகள் ஏற்படலாம். இவற்றால் பிறருடைய துயரைக் கூட நீக்கமுடியலாம். ஆனால், வாசுதேவ பரபிரம்மம் போன்ற மஹான்கள், ஒருக்காலும் அப்படி செய்யாமல் மந்த்ர ஜபம் முழுவதையும் பகவானுக்கே அர்ப்பித்ததால்தானே, அவர்கள் ஸாக்ஷாத்காரம் பெற்றார்கள்!

ஆதலால், எந்த நற்செயலாயிருந்தாலும் அது பகவத் அர்ப்பணமாக செய்தால் மட்டுமே, அது க்ஷேமத்தை அளிக்கும். அவர்களும் எவரை சரணாகதி செய்து, அவரை ஆச்ரயத்தாலும் சுத்தி அடைகின்றனர்களோ, அந்த ஸர்வ சக்தனான பகவானுக்கு நமஸ்காரம்.

நற்பிறவி கிடைத்தும், அதை பயன்படுத்தாமல் அதீத பாபம் செய்பவர்கள் கூட பாகவத ஸங்கத்தால் சுத்தி

அடைந்துவிடுகிறார்கள். சபரி வேடுவ குலத்தில் பிறந்து காட்டுமிராண்டி போல் வாழ்ந்தபோதிலும், மதங்க மஹரிஷியை ஆச்ரயித்ததால், அவள் எப்பேர்ப்பட்ட ஸத்கதியை அடைந்தாள்!

மனதை அடக்கும் தீரர்களால் ஆத்மாவாக உபாஸிக்கப்படுகின்றவனும், ஸர்வேஸ்வரனும், மூன்று வேதங்களால் உத்கோஷிக்கப்படுபவனும், தர்மமான வழியில் உபாஸிக்கப்படுபவரும், தவத்திற்கு ஒரே லக்ஷியமாக இருக்க வேண்டியவரும், கள்ளமில்லாத பக்தர்கள் மற்றும் பிரம்ம ருத்ராதிகளாலும் பார்த்து ரஸிக்கத்தக்க ஸ்வரூப லாவண்யத்தை உடையவருமான அந்த பகவான் எனக்கு அருள்புரியட்டும்.

லக்ஷ்மீகாந்தனும், யக்ஞங்களைக் காப்பாற்றுபவரும், பிரஜைகளைக் காப்பாற்றுபவரும், நற்புத்திக்கு பதியானவரும், உலகங்களுக்குக்கெல்லாம் பதியானவரும், பூமிக்கும் பதியானவரும், அந்தக வ்ருஷ்ணி மற்றும் ஸாத்வத குலங்களில் தோன்றியவர்களுக்கும், பதியும் ரக்ஷகருமான அந்த ஸாதுக்களை ரக்ஷிக்கும் பகவான், எனக்கு அருள் புரியட்டும்

உயர்ந்த ஸமாதியில் ஞானிகள் பார்க்கும் அந்த பகவான், எவனது திருவடி தியானத்தால் சித்தம் நிர்மலமாகி ஸமாதி கூடுகின்றதோ, எந்த ஆத்ம தத்துவத்தைக் காணும் இந்த ஞானிகள் தங்கள் ருசிக்கேற்றபடி பார்க்கின்றார்களோ, எடுத்துச் சொல்லி ஸ்தோத்திரம் செய்கின்றார்களோ, அந்த முக்தியை தரக் கூடிய முகுந்தன் எனக்கு அருள்புரியட்டும்.

கல்பம் ஆரம்பிக்கும்பொழுது, பிரம்மாவிற்கு சிருஷ்டி விஷயமான நினைவை ஏற்படுத்தியவரும், எவரால் தூண்டப்பட்ட வாக்கானது ஸலக்ஷண வேதரூபமாக வெளிவந்ததோ, அந்த ஞானத்தையளிப்பவர்களுள் சிரேஷ்டரான பகவான் எனக்கு அருள் புரியட்டும்.’

*பூதைர் மஹத்பிர்ய இமா: புரோ விபுர்நிர்மாய ஷேதே யதமூஷு*
*பூருஷ:*
*புங்க்தே குணான் ஷோடஷஷோட ஷாத்மக: ஸோலங்க்ருஷீஷ்ட*
*பகவான் வசாம்ஸிமே 2:4:23*

எந்த பகவான் இந்த சரீரங்களை சிருஷ்டி செய்து, அவைகளில் அந்தர்யாமியாக வசிப்பதனால் புருஷன் என்று அறியப்படுகின்றானோ, அப்படியறிந்து கொண்டு பதினான்கு

கரணங்களால், பதினாறு விஷயங்களை, அனுபவிக்கும் அந்த பகவான், எனது வாக்கை நன்கு அலங்கரிக்கட்டும் என்று பிரார்த்திக்கின்றார் சுகர்.

ஹரிகதையே கேட்கத்தக்கது என்று சுகர் பரீக்ஷித்திடம் கூறியுள்ளார். அதனால், அந்த அழகான வார்த்தைகளால் பகவானின் அழகான குணங்களை, அழகான ரூபத்தை, அழகான மஹிமைகளை, அழகாக வர்ணிக்கும்படி, தனக்கு அருள் புரியுமாறு, பகவானிடமே பிரார்த்திக்கின்றார் சுகர்.

மேல் சொன்ன பன்னிரெண்டு ஸ்லோகங்களால் பகவானை அழகாக துதி செய்தார் சுகர். இப்பொழுது ஒரு ஸ்லோகத்தால் வியாஸரைப் போற்றுகிறார்.

(கனியும்)

ஸ்ரீஸ்வாமிஜியை தரிசனம் செய்ய ஒருவர் வந்திருந்தார். ஸ்ரீஸ்வாமிஜி வழக்கமாக எல்லோரையும் விசாரிப்பது போல், அவரை என்ன செய்து கொண்டிருக்கின்றீர்கள் என்று கேட்டார். அதற்கு அவர், "நான் மனைவி, மக்கள், பணம், பதவி எல்லாவற்றையும் தியாகம் செய்து விட்டு, முழுவதுமாக ஆன்மீக வாழ்க்கையை நடத்தி வருகின்றேன்" என்றார்.

அவர் பேசிய தோரணையில், அவர் பெரிய தியாகத்தை செய்து விட்டு வந்துள்ளார் என்ற எண்ணம் மேலோங்கி இருந்தது. அதையே, மீண்டும் மீண்டும், சொல்லிக்கொண்டிருந்தார்.

ஸ்ரீஸ்வாமிஜி அவரிடம், "தியாகம் செய்து விட்டு ஆன்மீக வாழ்க்கையில் ஈடுபட்டுள்ளேன் என்பதை விட, பாக்ய விசேஷத்தால் ஆன்மீக வாழ்க்கைக்கு வந்துள்ளேன் என்று சொன்னால் நன்றாக இருக்குமே" என்றார்.

மற்றொருவர் ஸ்ரீஸ்வாமிஜி அவர்களிடம், "உலகம் உண்மையானதா, பொய்யானதா; தங்கள் அபிப்ராயம் என்ன" என்று கேட்டார். அதற்கு ஸ்ரீஸ்வாமிஜி, "அது ரொம்ப பெரிய விஷயம்; நமக்கு அது வேண்டாம். நீயும் நானும் ஒருநாள் இறக்க போவது சத்தியம்; அதற்குள் நிறைய நாமகீர்த்தனம் செய்வோம்" என்றார். -எம்.கே.ராமானுஜம்

# ஆறறிவே அந்தம் அல்ல!

- அச்சு

ஜீவராசிகளில் ஒரு அறிவு உடைய ஜீவராசி உண்டு. இரண்டு அறிவு உடைய ஜீவராசி உண்டு. மூன்று அறிவு உடைய ஜீவராசி உண்டு. நான்கு அறிவு உடைய ஜீவராசி உண்டு. ஐந்து அறிவு உடைய ஜீவராசி உண்டு. நமக்கு ஆறு அறிவு.

ஒரு மண்புழுவால் ஒரு யானையை முழுவதுமாக பார்க்க முடியுமா? முடியாது. ஏன், அந்த அறிவை பகவான் அதற்கு தரவில்லை? ஆடு, மாடுகளுக்கு பூமி சுழன்று கொண்டிருக்கின்றது என்பது தெரியுமா? தெரியாது. ஏன், அந்த அறிவை பகவான் அதற்கு தரவில்லை? என்ன செய்தால் ஒரு பூனைக்கு கம்ப்யூட்டர் என்று ஒன்று உள்ளது; இண்டர்நெட் உள்ளது என்பதை புரிய வைக்க முடியும்? முடியாது. ஏன், பகவான் அதற்கு அந்த அறிவை தரவில்லை?

நமக்கு உள்ள ஆறு அறிவும் இப்படித்தான். இந்த ஆறு அறிவை கொண்டு, இறைவன், தேவதையின் உலகங்கள், சுவர்க்கம், நரகம், மறுபிறவி, தேவர்கள் போன்றவைகளை முழுவதுமாக புரிந்து கொள்ளவோ, உணரவோ முடியாது. ஏன் என்றால் இவைகளை உணரும் அறிவை நமக்கு இறைவன் தரவில்லை.

மற்ற ஜீவராசிகளுக்கு ஒரு அறிவு போதும், இரண்டு அறிவு போதும், மூன்று அறிவு போதும், நான்கு அறிவு போதும், ஐந்து அறிவு போதும் என்று எந்த இறைவன் கட்டுப்படுத்தி வைத்துள்ளானோ, அதே இறைவன்தான் நமக்கு ஆறு அறிவு போதும் என்று கட்டுப்படுத்தி வைத்து உள்ளான். ஆனால், இறைவனுடைய அறிவோ இன்ஃபினிட் **(INFINITE)** அறிவு. ஆகவே மனிதனுடைய ஆறறிவுதான் பூரணமான அறிவு என்ற முடிவுக்கு வரவேண்டாம். நல்ல சம்ஸ்காரம், குரு அருள், சாஸ்திரங்களின் மீது நம்பிக்கை, இவற்றை கொண்டு

இறைவனின் அனந்தமான அறிவை அனுமானிக்கலாமே தவிர, அறிய முடியாது. பகவான் தன்னை எப்பொழுது, தானே உணர்த்துகின்றானோ, அதுவும் எந்த அளவுக்கு உணர்த்துகின்றானோ, அப்பொழுதுதான் அது அனுபவத்தில் வரும்.

ஒரு சிறுவன், வேதத்தை படிக்க ஆரம்பிப்பதற்கு முன்பாக காயத்ரி உபதேசம் செய்கின்றோம். ஏன்? காயத்ரி மந்திரம் சிவன், விஷ்ணு, தேவி என்று எந்த தெய்வத்தையும் குறிக்கும் மந்திரம் இல்லை. அந்த மந்திரத்தின் பொருள், "என்னுடைய அறிவானது தூண்டப்படட்டும்" என்பதே. அதனால்தான், ஒருவன் வேதத்தை கற்க ஆரம்பிப்பதன் முன்பாக, காயத்ரி உபதேசம் செய்கின்றோம்.

அறிவு சரியான சம்ஸ்காரத்துடன் தூண்டப்பட்டால்தான், சாஸ்திரத்தில் சொல்லியுள்ள விஷயங்களை, சரியான விதத்தில் புரிந்து கொள்ள முடியும்.


rb rajmani builders

launches its new project

"rajmani's mathura"

at kolapakkam (near Porur)

well designed and ventilated 2/3 bhk homes
(825 sq. ft to 1075 sq. ft) at fair prices

ph: 98400 30711 email: rajmanibuilders@gmail.com

ADVT

website: www.rajmanibuilders.com

# ஆசையே பிறவிக்கு காரணம்

–நல்ல ஹரி

நமக்கு வயதான காலத்தில், காது பழுதடைந்து விடுகின்றது. முன்பு போல் கேட்க முடியவில்லை. கண்கள் முன்பு போல் பார்க்கவோ, படிக்கவோ முடியவில்லை. முன்பு போல் சாப்பிட முடியவும் இல்லை. சாப்பிட்டாலும் செரிமானம் ஆவதில்லை. ஆனாலும் பார்க்க வேண்டும், கேட்க வேண்டும், சாப்பிட வேண்டும் என்ற எந்த ஆசையும் குறையவில்லை. சரீரம் ஒத்துழைக்க மறுக்கின்றது. தவிக்கின்றோம்.

அதுபோல் மரண சமயத்தில், நம்முடைய பூத உடலை எரிக்கவோ, புதைக்கவோ செய்கின்றார்கள். மனோமயமான ஒரு சரீரம்தான் அலைந்து கொண்டிருக்கின்றது. அந்த மனோமயமான சரீரத்தில், நாம் உயிருடன் இருக்கும்பொழுது, எந்த மனது இருந்ததோ, அதுவேதான் உள்ளது. அந்த மனதில், எவ்வளவோ ஆசைகள் உள்ளன.

அந்த ஆசைகளை அனுபவிக்க வேண்டும் என்றால், சரீரம் வேண்டும். அதனால்தான் அவன் பூமியில் ஒரு சரீரத்துடன் பிறக்கின்றான். ஆசைதான், மனிதனை பூமியில் பிறக்க செய்கின்றது. ஆசைதான், ஒரு மனிதனை நடத்தி செல்கின்றது. ஒரு மனிதன், பூவுலகத்தில் எதையும் அனுபவிப்பதற்கு ஆசைப்படாமல், முற்றிலும் இறையனுபவத்திற்காக மட்டுமே ஆசைப்படும்பொழுதுதான், அவன் முக்தி நிலையை அடைகின்றான்.

முன் அட்டை: சென்னை அண்ணா நகர் நாமத்வார் ஐந்தாம் ஆண்டு துவக்க விழா, ஜூன் 22
பின் அட்டை: மஹாரண்யம் ஸ்ரீபிள்ளையார் கோவில் கும்பாபிஷேகம், ஜூன் 12



# லீலா விநோதன்

-டாக்டர்.ஆ.பாக்யநாதன்

பகவான் கோபாலன், தனது பால லீலைகளால், கோகுலவாசிகளை ஆனந்தப்படுத்தினான். மதுரையில் சோமசுந்தர பகவான், பல திருவிளையாடல்களை புரிந்து, பக்தர்களை ஆனந்தப்படுத்தினான்.

அதுபோலவே பண்டரிபுரம், குருவாயூர், ஜகன்னாதம், திருவேங்கடம் போன்ற க்ஷேத்ரங்களில் கோவில் கொண்டுள்ள பகவானும், தனது பல விதமான லீலைகளால், பக்தர்களை ஆனந்தப்படுத்தி உள்ளான்.



விளையாட்டு என்பது பகவானுக்கு மட்டுமல்ல. மஹான்களுக்கும் உண்டு. தபோவனம் ஆஸ்ரமத்தை ஒட்டி, ஒரு மாந்தோப்பு இருந்தது. தபோவனத்திற்கு சொந்தமான மாந்தோப்பில், பழங்கள் பழுத்து அதை பறிப்பதற்கான உரிய சமயத்தை நெருங்கி கொண்டு இருந்தது.

ஞானானந்த ஸ்வாமிகள் அந்த ஊரை சேர்ந்த ஒருவரிடம், அந்த முறை அந்த தோப்பில் உள்ள பழங்களை பறித்து எடுத்து, வியாபாரம் செய்து கொள்வதற்கான குத்தகை தொகையை பேசிக் கொண்டிருந்தார்.

குத்தகை விவரங்கள் பேசி முடிவாகி விட்டது. ஸ்வாமிகள் அந்த குத்தகை பேசியவரிடம், "பழம் மரத்திலிருந்து தானாக விழுந்தால், அதை ஸ்வாமி எடுத்து கொள்ளலாமா?" என்றார்.

அவரும், "அதற்கென்ன ஸ்வாமி, தானாக பழம் விழுந்தால் தாங்கள் எடுத்து கொள்ளலாம்" என்றார். அவர் சொல்லி முடித்தாரோ இல்லையோ, ஸ்வாமிகள் ஒருமுறை

கைதட்டினார்; அவ்வளவுதான்! அத்துனை பழங்களும் பொத்தென்று தானாகவே கீழே விழுந்து விட்டது.

குத்தகை எடுத்தவர் ஆச்சரியத்துடன் பிரமித்து போய் நின்று விட்டார். ஸ்வாமிகளோ, "அதற்குத்தான் பெரியவர்கள், யோசிக்காமல், அவசரப்பட்டுக்கொண்டு எதையும் சொல்லக்கூடாது என்று சொல்லுவார்கள்" என்று சொல்லிக்கொண்டே, வயிறு குலுங்க குலுங்க, குழந்தை போல் சிரித்து கொண்டே நின்றார்!!

வேதாந்த விசாரம் செய்பவர்கள், ப்ரும்ம ஸ்வரூபம் எல்லா இடத்திலும் வியாபித்துள்ளது என்று சதா சிந்தனை செய்த போதிலும், அவர்களுக்கு, அந்த பிரும்மம், கிருஷ்ண அர்ச்சாவதாரத்திலும் இருக்கின்றது என்ற நம்பிக்கை வர மாட்டேன் என்கின்றது.

ஆனால், அர்ச்சாவதாரத்தில் பகவானை பக்தி செய்பவர்களுக்கோ, அந்த கிருஷ்ணன், சர்வ வ்யாபி என்ற சிந்தனை, எப்பொழுதும் நிரந்தரமாகவே உள்ளது.

- மஹாரண்யம் ஸ்ரீ ஸ்ரீ முரளீதர ஸ்வாமிஜி

ஸ்ரீஸ்வாமிஜி அவர்களின் ஸ்ரீமத்பாகவத உபன்யாசம் ஒரு ஊரில் நடந்து கொண்டிருந்தது. துருவ சரித்திர உபன்யாசம் முடிந்த பிறகு ஒருவர், ஸ்ரீஸ்வாமிஜி அவர்களிடம், "துருவன் போல், நான் காட்டிற்கு ஆறு மாதம் தவம் செய்ய போகின்றேன்" என்றார்.

ஸ்ரீஸ்வாமிஜி அவர்கள், "முதலில் நாம் இருக்கும் இடத்தில் ஆறு மணி நேரம் தொடர்ந்து தியானம் செய்வோம். பிறகு, காட்டிற்கு போவதை பற்றி யோசிப்போம்" என்றார்.

- எம்.கே. ராமானுஜம்

# வீடு தேடி வருவான் விட்டலன் - 5

தொலைக்காட்சியில் பல்லாயிரக்கணக்கான உள்ளங்களை கொள்ளை கொண்ட ஸ்ரீஸ்வாமிஜி அவர்களின் அருளுரைகளின் தொகுப்பு

புண்டலீகன் மனைவி, "சரி, உங்கள் அப்பா, அம்மா அனுமதி கொடுத்தால் நீங்கள் காசி போய் வாருங்கள்" என்றாள்.

மறுநாள் காலை, வயதான பெற்றோர்களை நமஸ்கரித்து, தான் காசி யாத்திரை போக இருப்பதாக சொன்னான் புண்டலீகன். அவர்களும், அவன் சொல்வது மிகவும் சரி என்றாலும், அவனை போலவே அவர்களுக்கும் காசி யாத்திரை போக வேண்டுமென்ற ஆசை இருக்கிறது என்றும், மேலும் இந்த வயதான காலத்தில் அவர்களை தவிக்க விட்டு விட்டு செல்லலாகாது என்றும் சொன்னார்கள். அவர்கள் மிகவும் வருத்தப்பட்டு, "மகனே, பிள்ளைகளை பெற்றெடுப்பதன் காரணமே, அவர்கள் மடியில் உயிரை விட வேண்டும் என்பதற்காகத்தான். பிள்ளை அக்னி ஸம்ஸ்காரம் செய்யவில்லை என்றால், அது பித்ருக்களை சேராது. வேறொருவர் அக்னி சம்ஸ்காரம் செய்வதை சாஸ்திரம் அனுமதிக்கவில்லையே. பித்ருக்களும் அதை ஏற்க மாட்டார்கள். ரத்த சம்பந்தம் இருந்தால்தான் பித்ருக்களை போய் சேரும். இல்லாவிடில் அது சேராது. நீ போய் விட்டால் எப்பொழுது திரும்பி வருவாயோ? மேலும் உனக்கு எப்படி கங்காஸ்நானத்தில் ஆசை இருக்குமோ அது எங்களுக்கும் இருக்கும் அல்லவா? அதனால் ஒரு காரியம் செய். எங்களையும் கங்கைக்கு கூட்டிச் செல்" என்றார்கள். அவர்கள் சொல்வதில், நியாயம் இருப்பதை ஆமோதித்து புண்டலீகன் சம்மதித்தான்.

அதை அப்படியே, மனைவியிடம் புண்டலீகன் சொன்னவுடன், அவள், "நான் மட்டும் இங்கே தனியாக இருந்து கொண்டு என்ன செய்வது? நானும் வருகிறேன்" என்றாள்.

அதனால் மனைவி, பிள்ளைகள், பெற்றோர்கள் என்று எல்லோரையும் அழைத்துக் கொண்டு கிளம்பி விட்டான் புண்டலீகன். இன்றைய நவீன காலத்தில் கூட, யாத்திரை செல்வது கடினமாக இருக்கிறது. ஆனால், அன்றைய கால கட்டத்தில் வாகன வசதி கிடையாது. நடந்து போக வேண்டும்.

வழியில், வனம் வரலாம்; பாலைவனம் போன்ற பகுதி வரலாம். போகும் வழியில் லாட்ஜ், ஹோட்டல் எல்லாம் இருக்காது. சத்திரங்களில்தான் சாப்பாடு, தங்குவது எல்லாம். வீட்டுத் திண்ணைகளில் ஓய்வு; இப்படித்தான் செல்ல வேண்டும். நடு நடுவே அங்கங்கு மழை, வெய்யில் என்ற மாற்றமும் வரும். அவசரத்துக்கு மருத்துவம் என்கிற வாய்ப்பெல்லாம் கிடையாது.

குழந்தைகளால் வெகுநேரம் நடக்க முடியவில்லை. "என்னை தூக்கி வைத்துக்கொள் அப்பா" என சொல்லும் அவை. அவர்களை தூக்கிக் கொள்வான் புண்டலீகன். வயதான தாய், "திரும்பி போய் விடலாமா? ஆர்வத்தில் வந்து விட்டோம். சொல்ல முடியாமல் கஷ்டப்படுகிறோம். கால்கள் வலிக்கின்றன" என, தந்தையோ, "அப்பா! அவள் சொல்லி விட்டாள். நான் சொல்ல முடியாமல் தவிக்கிறேன்" என பெற்றோர்கள் மாறி மாறி சொல்வர்.

புண்டலீகன், "திரும்பி போக முடியாத தூரம், நடந்து வந்து விட்டோம். இனி திரும்ப முடியாது" என்று பதில் சொன்னாலும், அவனுக்கு, அவர்கள் கஷ்டம் புரிந்தது. ஆனால், யாத்திரை போக வேண்டுமென்ற முடிவில் இருந்தான். அதனால் ஒரு உபாயம் செய்தான். ஒரு கட்டையின் இரு பக்கமும், இரண்டு கூடைகளை கட்டி தொங்க விட்டு, அதில் தாய் தந்தையரை அமர வைத்து தூக்கிக்கொண்டு போனான். எவ்வளவு தூரம் அப்படி போனான் என்றால், இன்றைய பண்டரீபுரம் வரை வந்து விட்டான். அங்கு வந்தவுடன், தாய் தந்தையருக்கு மிகவும் உடம்பு முடியாமல் போனது. அதனால் அவர்களது சிரம பரிகாரத்திற்காகவும், அவர்கள் உடம்பு தேறியவுடன், மேலும் யாத்திரை தொடங்கலாம் என்ற உத்தேசத்தில், சந்திரபாகா நதிக்கரையில் ஒரு குடிசை போட்டு அங்கேயே இருந்தான் புண்டலீகன்.

(தொடரும்)


**6TH HINDU SPIRITUAL SERVICE FOUNDATION**
**SERVICE FAIR - 2014**

**July 8th to 14th 2014** **Time: 9.30AM to 9PM**

**Venue: Sri Ramachandra Grounds, Vasudevan Nagar, Thiruvanmiyur - 600 041**
**(Behind Thiruvanmiyur Bus Depot)**

**ALL ARE WELCOME**

**Our Humble Pranams to the Lotus feet of His Holiness Sri Sri Muralidhara Swamiji**



**Guruam Consulting Private Ltd**

## சனாதனப்புதிர் பகுதி 63 - <u>கேள்விகள்</u> - ஆத்ரேயன்

**1.** ஸ்வாமி விவேகானந்தர் நிர்விகல்ப சமாதி அடைந்த தினம் **4.7.1902 -** அவருக்கு மாலை **7**மணி முதல் **9**மணி வரை பணிவிடை செய்தது யார்?

**2.** **4.7.1902** மாலை ஸ்வாமி விவேகானந்தர் யாருடன் எந்த இடம் வரை நடந்தார்?

**3.** **4.7.1902** காலை **11** மணி அளவில் ஸ்வாமி விவேகானந்தர் யாருடன் எந்த விஷயத்தை பற்றி பேசினார்?

**4.** ஸ்வாமி விவேகானந்தர் கும்பகோணத்தில் யாரை சந்தித்தார்? அவரது சிறப்பு என்ன?

**5.** ஸ்வாமி விவேகானந்தர் பிறந்த கிழமை, நாள் என்ன?

**6.** ஸ்வாமி விவேகானந்தரை அவரது தாய் புவனேஸ்வரி எப்படி அழைத்தார்? அவரது அன்னபிராசனத்தின்பொழுது வைக்கப்பட்ட பெயர் என்ன?

**7.** விவேகானந்தரின் தந்தை, தாய் எப்பொழுது இயற்கை எய்தினார்கள்?

**8.** ராணி ராஸ்மணி **1847**ஆம் வருடம் என்ன செய்தார்?

**9.** தக்ஷிணேஸ்வரத்தில் உள்ள காளி மற்றும் இதர கோவில்கள் யார் நிர்வாகத்தில் இருந்தது?

**10.** ராமகிருஷ்ண பரமஹம்ஸர் காளிகோவில் பூஜாரியாக எப்பொழுது நியமனம் செய்யப்பட்டார்?

### விடைகள்

**1.** ப்ரஹ்மசாரி ப்ரஜேந்திரா

**2.** ஸ்வாமி ப்ரேமானந்தர்; பேலூர் கடைவீதி வரை.

**3.** ஸ்வாமி சுத்தானந்தருடன் சுக்ல யஜுர்வேதத்தில் உள்ள வாஜஸேனயி சம்ஹிதையை பற்றி

**4.** கோவிந்த செட்டியாரை சந்தித்தார். மங்களாம்பிகையின் மந்திர சித்தியினால் முக்காலத்தையும் தெளிவாக சொல்பவராக இருந்தார். விவேகானந்தர் ராஜா அஜித்சிங்கிற்கு **15.2.1893** இவரை பற்றி விவரமாக கடிதம் எழுதி உள்ளார்.

**5.** திங்கள்கிழமை **- 12** ஜனவரி **1863 -** சூரிய உதயத்திற்கு ஆறு நிமிடம் முன்பாக

**6.** வீரேஸ்வரர் (பீரேஸ்வர்) அவரை பீலே என்று அழைத்தார்கள். அன்னப்ராசனத்தின்பொழுது நரேந்திரநாத் என்று பெயர் சூட்டப்பட்டது.

**7.** தந்தை விஸ்வநாத் **- 1884.** தாய் புவனேஸ்வரி **- 1911.**

**8.** தக்ஷிணேஸ்வரத்தில் **20**ஏக்கர் நிலம் வாங்கி பல கோவில்களை கட்டினார். **31.5.1855**இல் காளி கோவில் திறக்கப்பட்டது.

**9.** ராணி ராஸ்மணியின் மாப்பிள்ளையான மதுராநாத் பிஸ்வாஸ்

**10.** **1856**ஆம் ஆண்டு

## சிங்கப்பூர் மலேசிய சத்சங்கங்கள்

ஸ்ரீஸ்வாமிஜி அவர்களின் பூரண அருளாசிகளுடன் சிங்கப்பூர் மற்றும் மலேசிய நாடுகளுக்கு நாமப்பணிகளுக்காக சென்று வந்தார் டாக்டர்.பாக்யாஜி. அவர் முன்பாக சிங்கப்பூர் நாமத்வாரில் மே25இல் சத்சங்கமும் நாமகீர்த்தனமும், மே26 அன்று கோவிந்த பட்டாபிஷேக உத்ஸவமும் நடைபெற்றது. மே 23, 31 தேதிகளில், நாமத்வாரில் ஸ்ரீஸ்வாமிஜியின் புனித சரிதத்தை "மதுரஸ்மரணம் -My Guru as I See HIM" பாக்யாஜி அழகாக பேசினார். மிக அதிக அளவில் இதற்கு அன்பர்கள் வந்திருந்தது குறிப்பிடத்தக்கது. மே 31 காலையில் வயதானவர்களுக்கான நாராயண மிஷன் ஹோமிலும், ஜூன் 1 அன்று, Jurong community centreல் ஒரு Motivational talk அவர் நிகழ்த்தினார். தொடர்ந்து மலேசியாவிற்கு சென்ற அவர் முன்பு, பெனாங்க் டிவைன் லைஃப் சொசைட்டியில், ஜூன்5இல் ஒரு சத்சங்கம் நடைபெற்றது. அடுத்த இரு தினங்களில் ஷீரடி சென்டர் மற்றும் மலேசிய நாமத்வாரில் Motivational talk மற்றும் மஹாமந்திர கூட்டுப்ப்ரார்த்தனையும் டைபிங் கிருஷ்ணர் கோவிலில் ஒரு சத்சங்கமும் நடைபெற்றது. இவ்விடங்களில் ஸ்ரீஸ்வாமிஜி அவர்களின் உபதேசங்களை அவர் மிக தெளிவாகவும், எளிமையாகவும் எடுத்து பேசினார். ஜூன் 12இல் மலேசிய நாமத்வாரில், ஸ்ரீஸ்வாமிஜி அவர்களின் மதுரகீதங்களுக்கான, கோபகுடீர குழந்தைகளின் நாட்டிய நிகழ்ச்சியில் கலந்து கொண்டார். கேமரூன் ஹைலேண்ட் கோவில் மற்றும் இஜோக் சிவன் கோவிலில் ஜூன் 14, 15 தேதிகளில், மஹாமந்திர கூட்டுப்ப்ரார்த்தனையை நிகழ்த்தினார். ஜூன்17இல் கேரி ஹைலேண்ட் பள்ளியில், மாணவர்களுக்கான கூட்டு பிரார்த்தனையை நிகழ்த்தினார். இதில் நிர்வாகிகளும் மாணாக்கர்களும் உற்சாகமாக கலந்து கொண்டனர். படு குகைகள் டிவைன் லைஃப் சொசைட்டியில் ஜூன்19இல், ஒரு கூட்டு பிரார்த்தனையையும் பாக்யாஜி நிகழ்த்தினார்.

ஜூன் 20, 21 தேதிகளில் மதுர உத்ஸவத்தின் அங்கமாக மலேசிய நாமத்வாரிலும், ஸ்ரீஸ்வாமிஜி அவர்களின் புனித சரித்திரத்தை அழகாக பேசிய பாக்யாஜியின் உரையை கேட்க, திரளானோர் வந்திருந்தனர். இது நேரடி ஒளிபரப்பும் செய்யப்பட்டது. முடிவில் புஷ்ப வர்ஷம் ஸ்ரீப்ரேமிகவரதனுக்கு பாக்யாஜியால் செய்யப்பட்டது. இரு தினங்களும், ஸ்ரீஸ்வாமிஜி அவர்களின் மதுர கீதங்கள் பாடப்பட்டன.

மேலும் சிங்கப்பூர் மற்றும் மலேசியாவில், பல இல்லங்களில் நடைபெற்ற சத்சங்கங்களில், பாக்யாஜி பங்கு கொண்டார். சிங்கப்பூர் மற்றும் மலேசிய சத்சங்க அன்பர்கள் எல்லா இடங்களிலும், ஏற்பாடுகளை மஹாமந்திர கீர்த்தனத்துடன் அழகாக செய்திருந்தனர்.

## நியூசிலாந்து சத்சங்கங்கள்

ஸ்ரீஸ்வாமிஜி அவர்களின் பூரண அருளாசிகளுடன் நியூசிலாந்து மற்றும் ஆஸ்திரேலியாவிற்கு நாமப்பணிகளுக்காக பூர்ணிமாஜி சென்றுள்ளார். மே31 அன்று அவர், பத்ராசலம் ராமதாசரின் சரித்திரத்தை முதலில் ஒரு இல்ல சத்சங்கத்தில் வெலிங்டன், நியூசிலாந்தில் பேசினார். ஜூன் 1 அன்று, ஸ்ரீராதாகிருஷ்ண மந்திரில் ஸ்ரீமத்ராமாயணத்தை இந்தியிலும், ஜூன்4 அன்று, குறிஞ்சி முருகன் கோவிலில் சத்சங்கத்தின் பெருமை குறித்து, ஆங்கிலத்திலும் மிக அழகாக பேசினார். இவ்விடங்களிலும் மொத்தம் 50க்கும் மேற்பட்ட அன்பர்கள் கலந்து கொண்டனர்.

**Path of divine love - Introduction** என்ற தலைப்பில் ராண்ட்விக் லைப்ரரியில் ஜூன் 5, 6 தேதிகளில் பேசினார். ஜூன் 7,8 தேதிகளில் ஸ்ரீமத் பாகவதத்திலிருந்து, நவயோகி உபாக்யானத்தை குறிஞ்சி முருகன் கோவிலில் அழகாக எடுத்து பேசினார். ஜூன் 10 அன்று, ஆன்மீகத்தின் சாரம் என்ன என்பது குறித்து **johnsonville Community Centre**இல் பேசினார். மேலும் ஜூன் 14, 15 தேதிகளில் நேபாளி வைஷ்ணவ பரிஷத் சங்கத்தில், "குரு மஹிமை மற்றும் நாம மஹிமை" குறித்து, திரளாக வந்திருந்த அன்பர்கள் முன்பாக மிக விரிவாக பேசினார். மேற்கொண்டு பிஜிதீவுகளில் பல சத்சங்கங்களில் பங்கேற்க அவர் சென்றிருந்தார்.

GOD Global Organisation for Divinity
with the blessings of H.H. Sri Sri Muralidhara Swamiji, presents
puranava
Inter School Heritage Quiz

*Venue:* Tapovan Hall, Chinmaya Heritage Centre, 13th Avenue, Off Harrington Road, Chetpet

*Contact Number:* SanathKumar - 9543033666
*Email Registrations to:* samskruti14@gmail.com
*Last Date for Registrations:* 15th July, 2014

9AM-12.30PM, Saturday, 2nd August 2014

## பாலகர்களுக்கு ஒரு கதை



# பணி செய்யும் விதம்!

மூன்று வரலாற்று ஆசிரியர்கள் இருந்தனர். மூவருமே ஒரே பள்ளியில் பணியாற்றி வந்தனர். அதில், ஒருவர் எப்பொழுதும் உற்சாகமிழந்து காணப்படுவார். அவரை ஏனென்று கேட்டால், "நான் வெறும் வரலாற்று ஆசிரியன். எனக்கு வேறு ஒன்றும் தெரியாது. வரலாறு மாறாத ஒன்று. என் வேலையும் மாறாது "என்பார்.

இரண்டாவது ஆசிரியர் நன்றாக பாடம் எடுப்பார். ஒழுங்காக தன் கடமையை செய்வார். "என் வேலை சொல்லிக் கொடுப்பது. அதோடு என் வேலை முடிந்து விடுகிறது. என் கடமை இது. வாங்கும் சம்பளத்துக்கு வேலை பார்க்கிறேன்" என்பார். வேலையுண்டு, தானுண்டு என்றிருப்பார் அவர்.

மூன்றாவது ஆசிரியர் எப்பொழுதும் உற்சாகத்துடன் இருப்பார். மாணவர்களை தட்டிக் கொடுத்துக்கொண்டே இருப்பார். அவர்களிடம் நம் நாட்டு சரித்திரத்தை பற்றி, அதில் வரும் பெரும் தலைவர்களை பற்றி ,அவர்கள் செய்த அரும் பெரும் காரியங்களை பற்றி, தியாகங்கள், அரிய கண்டுபிடிப்புகள், அவர்களின் மேலான அறிவு போன்ற பல விஷயங்களை பற்றி பெருமையாக பேசுவார். அவற்றை எல்லாம் மாணவர்கள் மனதில் ஆழமாக பதியும்படி உணர்ச்சி பூர்வமாக பேசுவார்.

அவர் எப்பொழுதும் உற்சாகமாக காணப்படுவார். அவரை எப்படி உங்களால் உற்சாகமாய் இருக்க முடிகிறது என்று கேட்டால், "நான் சரித்திரம் சொல்லி கொடுக்கிறேன். அதனால் ஒரு புதிய சரித்திரம் படைக்க போகிறேன்" என்பார். எப்படி அய்யா இது சாத்தியம்? வரலாறு மாறாத ஒன்றாயிற்றே என்றால், அவர் தரும் பதில் வித்யாசமாக இருக்கும்.

"நான் யாரை பற்றி பாடம் சொல்லிக்கொடுக்கிறேனோ அவர்களை மாணவர்கள் மனதில் பதியும்படி செய்கிறேன்.

அதனால் அவர்களுக்கும் அந்த சரித்திர புகழ் பெற்றவர் போல் சாதிக்க வேண்டும் என்று தோன்றும். அதனால் அந்த மாணவன் முன்னிலும் அதிக முயற்சி எடுப்பான். அவனும் சரித்திரத்தில் யாரை பற்றி கேள்விப்பட்டு உந்தப்பட்டானோ, அவர் போலவே நாளை காரியம் சாதிப்பான். இப்பொழுது சொல்லுங்கள். நான் சரித்திரம் சொல்லிக் கொடுத்து புதிய சரித்திரம் படைக்கிறேன் அல்லவா? என்பாரவர். அவர் கண்களில் ஒரு மேலான கற்பனையும், ஒளியும் தென்படும். அவர் எடுக்கும் வகுப்பில் மாணவர்களும் உற்சாகமுடன் பாடத்தை கவனிப்பர்.

அந்த மூன்றாவது ஆசிரியர் போல் நாமும் இருக்க வேண்டும். ஒரு வேலையை ஏனோ தானோ என்று செய்கிறோமா, அல்லது கடமையே என்று செய்கிறோமா, அல்லது அதில் நம் முழு ஈடுபாட்டையும் செலுத்துகிறோமா என்பது, அந்த வேலையில் நமக்கு இருக்கும் உற்சாகத்தை பொறுத்து அமைகிறது. ஆதலால் எந்த வேலை செய்கிறோம் என்பதை விட, அதை எப்படி செய்கிறோம் என்பதே மிக முக்கியம் ஆகும்.


**Dr. Shriraam Mahadevan**

MD (Int Med), DM (Endocrinology)
Consultant in Endocrinology and Diabetes
Regn. No 62256

**ENDOCRINE & SPECIALITY CLINIC**

New 27/1, Old 11/1, (Gr.Floor), 4th Cross Street,
R.K.Nagar, Mandaveli, Chennai - 600 028.
(Next to Krishnamachari Yogamandiram)
Tel: 2495 0090Mob: 94458 80090
E-mail: mshriraam@gmail.com,www.chennaiendocrine.com
www.chennaiendocrine.com

**ஜூன் 3 - 12** மதுரபுரி ஆஸ்ரமத்தில் ஸ்ரீஸ்வாமிஜி அவர்களின் முன்னிலையில், மாதுரீஸகீ ஸமேத ஸ்ரீப்ரேமிகவரதனின் வசந்தோத்ஸவம் கொண்டாடப்பட்டது. காலை வேத பாராயணமும், மாலை கீர்த்தனங்களும் பாடப்பெற்றன. 12ஆம் தேதி, ஸ்ரீஸ்வாமிஜி அவர்களின் முன்பாக, வேதபாராயணத்துடன் காஞ்சி மஹாஸ்வாமிகளின் ஜெயந்தி கொண்டாடப்பட்டது.

**ஜூன் 2** - ஸ்ரீஸ்வாமிஜி அவர்களின் முன்னிலையில், கங்காபுரம் ஸ்ரீஅனந்தசயன பெருமாள் கோவில் கும்பாபிஷேகம் சிறப்பாக நடைபெற்றது. **ஜூன் 12** - மஹாரண்யம் பிள்ளையார் கோவில் கும்பாபிஷேகம், திரளான அன்பர்கள் பங்கேற்க, ஸ்ரீஸ்வாமிஜி அவர்களின் முன்னிலையில், சிறப்பாக நடைபெற்றது.

**ஜூன் 22** - அண்ணா நகர் நாமத்வாரின் ஐந்தாம் ஆண்டு துவக்க விழா, ஸ்ரீஸ்வாமிஜி அவர்களின் முன்னிலையில், அண்ணா நகர் பி.எஸ்.பி.கூடத்தில் கோலாஹலமாக கொண்டாடப்பட்டது. கோபகுடீர குழந்தைகள் வெகு சிறப்பாக பாரதத்தில் தோன்றிய மஹான்களை குறித்து கலை நிகழ்ச்சிகளை அரங்கேற்றினர். ஸ்ரீஸ்வாமிஜி அவர்களின் கீர்த்தனங்களை அழகாக பாடி பரத நாட்டியமாடினர். ஸ்ரீஸ்வாமிஜி அவர்கள், குழந்தைகளுக்கு பரிசளித்து அனைவருக்கும் ஆசிகள் வழங்கி பேசினார்கள். திரளான அன்பர்கள் பங்கேற்றிருந்தனர். அண்ணாநகர் காட் சத்சங்க அன்பர்கள் மிக அழகாக ஏற்பாடுகளை செய்திருந்தனர்.

**ஜூன் 2 - 11** - சிவகாசி நாமத்வாரில் முரளிஜி ஸ்ரீமத் ராமாயண உபன்யாசம் செய்தார். திரளான அன்பர்கள் வந்து, சிரவணம் செய்து, திருவருளும் குருவருளும் பெற்று சென்றனர்.

with the blessings of H.H. Sri Sri Muralidhara Swamiji, presents

GOD
Global Organisation for Divinity

samskruti 14

**The Annual Inter School Heritage Festival**

*Venue:* Ramakrishna Mission Hr Sec School,
Bazullah Rd, T Nagar
*Contact Number:* Vignesh - 9840762306
*Email Registrations to:* samskruti14@gmail.com
*Last Date for Registrations:* 15th July, 2014

9AM-2PM,
Sunday,
27th July 2014

Facebook event: Photography contest, Theme: Powerful prayers Age: Below 30 years. Log on to our page www.facebook.com/samskruti for updates

# ப்ருந்தாவனமும் நந்தகுமாரனும்



- ஜனனி

## ஸ்ரீபக்த கோகில்ஜி -7

கோகில்ஜிக்கு ஸீதையிடம் ப்ரார்த்திப்பது என்பது நடக்கவே நடக்காத விஷயம். அவர் கூறுவார், ப்ரிய ஸ்வாமினியிடம் அவளது க்ருபையை ப்ரார்த்திப்பதும் உசிதமானதல்ல. அவள் ஸஹஜ ஸ்வரூபத்தில் நிலைத்திருப்பதே சரி. தனது ஆனந்தமான நிலையிலிருந்து, என்னை காக்க அவள் சற்று என் மேல் பார்வையை செலுத்தும், அந்த கஷ்டம் கூட அவளுக்கு வரக்கூடாது. ஜனகநந்தினியிடம் அவருக்கிருந்த ஏகாந்த நிஷ்டையும் குறிப்பிடத்தக்கது. ராதாராணியின் தாமத்தில் வஸித்தபோதிலும் அவர் ராதையிடம் ப்ரார்த்திப்பது, "ஹே தேவி! என்னுடைய ப்ரேமையும், மனதும் முழுவதும் ஜனகநந்தினிக்கே உரியதாக இருக்க, நீ அருள் புரிய வேண்டும். ஜனகநந்தினி எப்பொழுதும் சௌக்கியமாக ஸந்தோஷமாக இருக்க வேண்டும்" என்பதேயாகும்.

இஷ்ட தெய்வத்திடம் ஏகாந்த நிஷ்டையுடன் இருப்பதற்கு, அவர் ஒரு அழகான ஹாஸ்யமான கதை கூறுவார். ஒரு கிழவியிடம் ஸத்குருநாதர் பால கோபாலன் மூர்த்தியை அளித்து, "இதை உன் குழந்தையாக நினைத்து ஆசையுடன் பார்த்துக் கொள்" என்று கூறினார். கிழவியும் அவ்வாறே செய்ய தொடங்கினாள். கிராமத்து விளையாட்டுப் பிள்ளைகள் அவளிடம் வேடிக்கை செய்தனர். அவர்கள் அவளிடம், "பாட்டி, இங்கே ஒரு ஓநாய் உலவுகிறது. அது குழந்தைகளை தூக்கிச் சென்றுவிடுகிறதாம்" என்று கூறினார்கள். இதை கேட்டதிலிருந்து, அந்த கிழவி பாலகோபாலனை வீட்டிற்குள்ளே ஜாக்கிரதையாக வைத்து, தான் கையில் ஒரு கோலுடன் வாசற்கதவருகில் அமர்ந்து விட்டாள். ஐந்து நாட்கள் தொடர்ந்து, இரவு பகல் என்று பாராமல் அங்கு பாரா சென்றபடி இருந்தாள். கள்ளமில்லா இந்த தாயின் பாவத்தைப் பார்த்து, அதை ப்ரத்யக்ஷமாக அனுபவிக்க வேண்டும் என்ற ஆசை, பகவானுக்கே ஏற்பட்டுவிட்டது. அவர் அழகான ஒரு ரூபத்தை எடுத்துக்கொண்டு, மிகவும் அழகான வஸ்திராபரணங்களை தரித்துக் கொண்டு, அவள் முன் வந்தார்.

பாதங்களின் சப்தத்தை கேட்டு, அவள், 'எங்கு ஓநாய்தான் வந்துவிட்டதோ?' என்று பதைபதைத்தாள்; கையில் கழியை எடுத்தும் விட்டாள். ஷ்யாமஸுந்தரன், "அம்மா! நீ ப்ரேமையுடன் பார்த்துக் கொள்கிறாயே, அந்த பாலகன்தான் நான்! என்றான். அவள், "இவ்வாறெல்லாம் பேசி என்னை யாரும் ஏமாற்ற முடியாது" என்றாள்.

ப்ரபு ப்ரஸன்னமாகி, "தாயே! நான்தான் இந்த மூவுலகுக்கும் நாதனான பகவான். என்ன வரம் வேண்டுமோ கேள்!" என்று கூறினான். அதற்கு பாட்டி, "அப்படியானால் மிகவும் நல்லது. தங்களுக்கு ஆயிரம் கோடி நமஸ்காரங்கள். தயை கூர்ந்து எனக்கு ஒரு வரமளிக்க வேண்டும். என் உயிரினும் மேலான என்னுடைய செல்ல கண்ணனை ஓநாய் எடுத்து செல்ல கூடாது. இதுவே நான் கேட்கும் வரம்" என்றாள். ப்ரபு மேலும் ப்ரஸன்னமாகி, "அப்படியென்றால் சரி! வா, நான் உன்னையும் உனது கண்ணனையும் என்னுடைய தாமத்திற்கு அழைத்துச் செல்கின்றேன். அங்கு ஓநாய்களின் பயமே கிடையாது" என்று கூறினார். அவர்களை தன்னுடன் அழைத்து சென்றுவிட்டார். ஏகாந்த நிஷ்டை எதைத்தான் அளிக்காது?

ஸ்வாமி கோகில்ஜியின் ஸத்ஸங்கத்தில், எல்லோரும் மிகுந்த ஆனந்தத்தை அனுபவித்தார்கள். விளையாட்டாக எளிமையான பாஷையில், மிக உயர்ந்த நுட்பமான ஆன்மீக ஸாத்ய-ஸாதன விஷயங்களைப் பற்றி அவர் கூறுவது ஸாதகர்களுக்கு மிகவும் பயனளிக்கும்.

ஒருவர் கேட்டார், "ஜீவனின் அழைப்பு ஈஸ்வரனை எப்படி அடையும் ஸ்வாமி?"

கோகில்ஜி கூறினார், "பகவானுடைய தொலைபேசி எண் என்ன தெரியுமா? அஹங்காரமில்லாமல் இருப்பதுதான். அவரது முனையில் தொலைபேசி எப்பொழுதும் தொடர்புடையதாகவே (**connected**-ஆகவே) தான் உள்ளது. ஒரு நிமிடம் கூட தொடர்பற்று (**engaged**-ஆக) இருப்பதில்லை. நமது முனையிலிருந்து தொடர்பை நிலைநிறுத்தவே, நாம் முயல வேண்டும். அஹங்காரத்தை விட்டு உயர்ந்த குரலில் அவரது நாம, குண மற்றும் லீலைகளை கீர்த்தனம் செய்தபடி அவரை கூவி அழைத்தால், நமது அழைப்பு அவரை சென்றடையும்".

(தொடரும்)

# மாலே மணிவண்ணா - 129

–மகாவித்துவான்
மயிலம். வே. சிவசுப்பிரமணியன்




சங்க இலக்கியங்களுள் ஒன்றாகிய எட்டுத் தொகை நூல்களுள் 'ஓங்கு பரிபாடல்' என்று ஐந்தாவதாக வரிசைப் படுத்தப்பெறும் பரிபாடல், 70 பாடல்களை உடையது ஆகும். 'அன்பின் ஐந்திணை' என்னும் இறையனார் களவியல் முதற்சூத்திர உரையில் நக்கீரராலும் "தரவின்றாகி" என்னும் தொல்காப்பியச் செய்யுளியல் 149ஆம் சூத்திர உரையாலும், 150 கவியும், 70 பரிபாடலும் என்று சொல்லப் பெறுதலின் பரிபாடல் 70 பாடல்களை உடையதாக இருந்துள்ளது என்பது தெரிய வருகிறது. அவ்வெழுவது பாடல்களை இன்னார்க்கு இவ்வளவு என்று வரிசைப்படுத்துகிற பழம்பாடல்,

"திருமாற் திருநான்கு செவ்வேட்கு முப்பத்
தொருபாட்டு காடுகாட்கொன்று - மருவினிய
வையைக்குப் பத்தூறு மாமதுரை நான்கென்ப
செய்யபரி பாடல் திறம்"

என்பதாகும். ஆனால் இப்பாடல்களுள் முதலிலிருந்து தொடர்ச்சியாக இருபத்திரண்டு பாடல்களும் பழைய உரைகளில் மேற்கோளாகக் காட்டப்பெற்ற இரண்டு பாடல்களும், சில சிதைந்த அடிகளும், புறத்திரட்டு நூலிலிருந்து கிடைத்த சில சிதைந்த அடிகளும்தான் கிடைத்துள்ளன. நூலிற் கிடைத்த 22 பாடல்களுள், திருமாலுக்குரியவை ஆறு. 1, 2, 3, 4, 13, 15 ஆகிய வரிசை எண் உள்ள பாடல்கள் இந்த ஆறு பாடல்களுக்குரிய விளக்கத்தை இக்கட்டுரை வரிசையில் இதுவரை கண்டோம். பிறர் உரையில் மேற்கோளாகக் கிடைத்த இரண்டு பாடல்களுள் ஒன்று திருமாலுக்குரியது. ஆக திருமாலுக்குரிய எட்டு பாடல்களுள் ஏழு பாடல்கள் நமக்குக் கிடைத்திருப்பது நாம் பெற்ற பேறு எனலாம். தமிழ்த்தாத்தா டாக்டர் உ.வே.சா. அவர்கள் தேடித் தந்த தமிழ் நிதி எனலாம்.

அந்த ஏழாவது பாடல், தொல்காப்பியம், பொருளதிகாரம், செய்யுளியல், சூத்திரம் 121க்குப் பேராசிரியர், நச்சினார்க்கினியர் ஆகியவர்கள் எழுதிய உரையிலிருந்து கிடைத்தது.

ஆகவே திருமால் பற்றிப் பரிபாடலில் இருந்த எட்டு பாடல்களுள் 7 பாடல்கள் கிடைத்துள்ளமைக்கு மகிழ்வோம். மதுரை நகருக்குள்ளே எழுந்தருளியிருக்கின்ற திருமால் திருக்கோயிலைச் சார்ந்த பாடலாக இப்பாடல் அமைகிறது. மதுரை நகரைப் பற்றி சில செய்திகளை இங்கு அறிவது நலம் தரும். மதுரை நகரைப் பற்றி பரிபாடலில் உதிரியாகக் கிடைத்த ஒரு பாடற்பகுதி,

"உலகம் ஒருநிறையாத் தான்ஓர் நிறையாப்

புலவர் புலக்கோலால் தூக்க - உலகனைத்தும்

தான்வாட வாடாத தன்மைத்தே தென்னவன்

நான் மாடக் கூடல் நகர்" என்கிறது.

புலவர்கள் தம்முடைய அறிவு என்னும் துலாக்கோலை (தராசை)த் தூக்கி, ஒரு தட்டிலே எல்லா உலகங்களையும், ஒரு தட்டிலே நான்மாடக்கூடல் நகராகிய தென்னவன் மதுரையையும் வைத்து நிறுத்தால் உலகம் எல்லாம் வாடிவிடும், மதுரை வாடாமல் நிற்கும் என்று பழம்பாடல் சொல்வது மதுரையின் சிறப்பை அறியப் போதுமானது.

தமிழ் நாகரிகத்தின் தாயகமாக, தலைசிறந்த சின்னமாக விளங்கி வருவது மதுரை; தமிழ்மொழியைப் பாதுகாத்தளித்த பெருமை உடையது; மிக்க தொன்மைச் சிறப்புடையது; தமிழோடு தொடர்பு படுத்திப் புகழப்பெறுவது.

(தொடரும்)

with the blessings of H.H. Sri Sri Muralidhara Swamiji, presents

GOD
Global Organisation for Divinity

YOUTH LEADERSHIP WORKSHOP '14
For Class 9th – 12th students
Topic: Leadership and Success Mindset
For further details, contact – 044 23718351

# அப்பாலுக்கு அப்பால்



அல்லமரின் கேள்விக்கு பதிலாக மஹாதேவி, அவர் முன், தனது முழு வரலாற்றையும், பிற சரணர்களுக்காக எடுத்து சொன்னபின் அல்லமர் மகிழ்ச்சியுற்று, மஹாதேவியை புகழ்ந்து பேசினார். மேலும் சிலகாலம் அல்லமருடன் இருந்தபின், ஸ்ரீசைலத்திற்கு சென்று தவத்திலேயே காலம் கழித்த மஹாதேவி. தமது 25ஆம் வயதிலேயே மல்லிகார்ஜுனருடன் இரண்டற கலந்தார். அவர் தவம் செய்த குகைகள் இன்றும் ஸ்ரீசைலத்தில் பிரசித்தியாக இருக்கிறது.

தமது வசனங்களில், ஏராளமான வீரசைவத்திற்கு ஆதாரமான விஷயங்களை, எடுத்து போதித்த அல்லமரும் சிலகாலம் கழித்து கல்யாண் நகரை விட்டு கிளம்பினார். கிளம்பும் முன் பசவரிடம், "பசவண்ணா! நான் எங்கு சென்றாலும் உங்களை பிரிவதில்லை. உமது செயல்களில் நான் மிகவும் சந்தோஷமடைந்தேன். இங்கே ஒரு கலவரம் வெடிக்கும். அதன்பின் நீ இங்கிருக்க வேண்டியதில்லை. உன் அவதார காரியம் முடிவுற்றது" என்று சொல்லி பிரிந்து ஸ்ரீசைலம் நோக்கி சென்றார். வழியில் கோரக்கரை சந்தித்தாரென்று இருக்கிறது. கோரக்கர் தேகத்தை வஜ்ரம் போல் திடமாக வைத்திருந்தார். அவரிடம் அல்லமர், "தேகம் அழியும் தன்மை கொண்டது, அதனால் ஆன்மாவை உள்ளபடி உணர்தலே உயர்ந்தது" என்று எடுத்துரைத்தார். இருவருக்குமிடையே வாதமும், போட்டியும் நடந்தது. அதில் தன் உடலை, வாள் கொண்டு அறுக்குமாறு சொன்னார் கோரக்கர். அவரது உடலை, வாளால் ஒன்றுமே செய்ய முடியவில்லை. பதிலுக்கு அல்லமர் உடலை வாள் கொண்டு அறுக்கையில், வாள் அவர் உடலை, ஊடுருவி காற்றினில் செல்வது போல் கடந்து சென்றதே ஒழிய, உடலை ஒன்றும் செய்யவில்லை. அப்படியே படிப்படியாக, கருடனை கண்ட பாம்பின் விஷம் எப்படி செயலறுமோ அதுபோல, அல்லமரை சந்தித்ததிலிருந்து விரைவாக கோரக்கரிடமிருந்த சித்திகளின் மீதான ஆர்வம் குறைந்து, அவர் ஆன்ம சாதனையை கை கொண்டார். அதன்பின் அல்லமர் அவரை பிரிந்து தவத்திற்கு சென்றார்.

பசவர், மொத்த சமுதாயத்தையும், ஆன்மீகத்தில் மேம்படுத்த எடுத்த முயற்சிகள் அக்கால கட்டுப்பாடுகளால்

அவருக்கு பலத்த எதிர்ப்புகளை தந்தன. ஒரு கலப்பு திருமணத்தில் ஆரம்பித்த புகைச்சல் பெரிதாக வெடித்தது. இதை முன்னரே அல்லமர் சொல்லி இருந்ததால், அவர் சொல்லியபடி, அச்சமயத்தில் பசவர் கல்யாண் நகரை விட்டு கூடலசங்கமத்திற்கு கிளம்பினார்.

பிஜ்ஜால மன்னன் சூழ்ச்சியினால் கொல்லப்பட்டான். அதனால் கலவரம் வெடித்தது. சரணர்கள், உள்நாட்டு கலவரம் செய்கின்றனர் என்ற குற்றச்சாட்டு வந்தது. உயிரையும் பலவிதத்திலும் சரணர்கள், தியாகம் செய்ய வேண்டி வந்தது. கல்யாண் நகரை விட்டு அவர்கள் கிளம்பினர். சரணர்களை கூடலசங்கமத்திற்கு வரவேண்டாம் என்றும், வேறு ஒரு இடத்தில் இருந்து இயங்குமாறும் பசவர் செய்தி அனுப்பினார். முதலில் சென்னபசவரும் பின்னர் சித்தாராமரும் சோலாபூரில் தலைமை தாங்கி சரணர்களையும், வசனங்களையும் காப்பாற்றி தந்தனர். பசவரின் மனைவி கங்காம்பிகையும் பசவரின் அக்கா நாகம்மாளும் சரணர்களுடன் இருந்தனர். அவர்களால் அல்லமர், பசவர், மஹாதேவி போன்றோரின் ஏராளமான வசனங்கள் காப்பாற்றப்பட்டாலும், ஏராளமான அவைகள், இன்று சொற்பமே கிடைக்கின்றன.

பசவர் இறுதியில் கூடலசங்கமத்தில், "எல்லாம் ஈசான்ய குருவின் அருளால் நடைபெற்றது. அவரே பல காரியங்களை செய்ய ஊக்குவித்தார். அவரே பக்தர்களை கூட்டி வைத்தார். அவராலேயே இந்த இடம் புகழ் பெற போகிறது" என்றார். பலவிதத்திலும் உயர்ந்திருந்த பசவரின் குருபக்தியை நினைத்து அனைவரும் வியந்தனர்.

நீலாம்பிகை மட்டும் பசவருடன் இருந்தார். கல்யாண் நகரில் சரணர்களுக்கு ஏற்பட்ட கஷ்டங்கள் பசவரை மிகுந்த வருத்தத்தில் தள்ளின. அல்லமரும், ஈசான்யரும் அவர் முன் தோன்றி, "இது தெய்வ சங்கல்பம்" என்று சொல்லி அவர் மனதை சமாதானம் செய்தனர்.

"பக்தி என்ற மண்ணில், குரு என்ற விதை தோன்றி, லிங்கத்தையும் தியானத்தையும் காட்டியது. அது நட்ட மரத்தில் விளைந்த ஞானம் எனும் பழத்தை அதுவே எடுத்துக் கொண்டது" என்பது பசவரின் ஒரு வசன வார்த்தை. அதன் அர்த்தம், பசவரின் வாழ்க்கையாகவே அமைந்தது. எங்கு அவரை ஈசான்யர், உலகிற்கு ஆசாரியனாக இருக்க வேண்டும் என்று ஆக்ஞாபித்தாரோ, அந்த கூடலசங்கமத்திலேயே தியானத்தில் அமர்ந்தபடி சித்தியானார் பசவர்.

"மதுரமுரளி" ஆண்டு சந்தா ரூ 120
For Details: **+91-44-24895875**

"மதுரமுரளி" மாத இதழ் சந்தா அனுப்ப முகவரி:

Guruji Sri Muralidhara Swamigal Mission, 51, 7th Avenue, Ashok Nagar, Chennai - 83 .
**D.D. in name of Guruji Sri Muralidhara Swamigal Mission** / நேரில் ரொக்கம் / மணியார்டர் (**D.D /M.O/Cash**) மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும்.

ஒரு வருட சந்தா மட்டுமே பெற்று கொள்ளப்படுகிறது.
கொரியரில் பெற விரும்புவோர் கொரியர் செலவை தனியாக செலுத்தி பெறலாம்.
***ஏற்கனவே சந்தாதாரராக இருப்பவர்கள் தங்களது சந்தாவை புதுப்பிக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.***


* Publisher : S.Srinivasan on behalf of Guruji Sri Muralidhara Swamigal Mission
* Copyright of articles published in Madhuramurali is reserved. No part of this magazine may be reproduced, reprinted or utilised in any form without permission in writing from the publisher of Madhuramurali.
* Views expressed in articles are those of the respective Authors and do not reflect the views of the Magazine.
* Advertisements in Madhuramurali are invited.


| ஸ்ரீஸ்வாமிஜி அவர்களின் தரிசனம் | |
|---|---|
| ஏகாதசி | ஜூலை 8, 22 ஆகஸ்டு 7, 21 |

## Announcement

**To know about Sri Swamiji's Darshan Timings, Events & also to Register your Prayers, Please call +91-9382393833**

ஸ்ரீஸ்வாமிஜி அவர்களுக்குத் தெரிவிக்க வேண்டிய விஷயங்களை
Dr.A.BHAGYANATHAN, Personal Secretary to
**HIS HOLINESS SRI SRI MURALIDHARA SWAMIJI**
New No. 51, Old No. 24, 7th Avenue, Ashok Nagar, Chennai - 83.
Tel. : +9144-2489 5875, Email : contact@namadwaar.org என்னும் முகவரிக்கு அனுப்பவும்.